செ.வெ.எண்:   15                                                                                    நாள்:07.08.2017

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்ட சமூக நலத்துறையின் வாயிலாக கரூர் மாவட்டத்தில் உள்ள விதவை, கணவனால் கைவிடப்பட்டவர், ஆதரவற்றோர், மற்றும் மாற்றுத் திறனாளி ஏழைப் பெண்களுக்கு மின் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் விலையில்லாமல் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பத்துடன் வருமானச் சான்று, இருப்பிடச்சான்று, தையல் பயிற்சி சான்று, கல்விச்சான்று அல்லது பிறப்புச்சான்று, சாதிச்சான்று, விதவை, கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற மகளிர் மற்றும் மாற்றுதிறனாளி என்பதற்கான சான்று, ஆதார் அடையாள அட்டை நகல், கடவுச்சீட்டு அளவுள்ள புகைப்படம் இரண்டு ஆகியவற்றுடன் விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், முதல் தளம், கரூர்–7 என்ற முகவரிக்கு **15.08.2017**ம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சி தலைவர் திரு. கு. கோவிந்தராஜ் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.